# True Disciple
# உண்மை சீஷன்

**May - June 2018 மே - ஜூன்**

A Bi-Monthly News Bulletin of City Revival AG Church



# தயவு கிடைக்கப்பண்ணும் தேவன்

பாஸ்டர். **ஜெரி டேனியல்**

எனக்கு தயவு கிடைக்கப்பண்ணின தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.
எஸ்றா 7:28

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கையிலும் தேவ தயவு அவசியமாகியிருக்கிறது. தேவ தயவு நம்மை பணமும் பட்டங்களும் கொண்டு செல்ல முடியாத இடங்களுக்கு கொண்டு செல்லும். திறமைகளும் கடின உழைப்பும் கூட தர முடியாத வாய்ப்புகளை நமக்கு கொண்டு வரும். தேவனுடைய கால அட்டவணையில் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தயவு செய்யும் காலத்தை வைத்திருக்கிறார். அப்பொழுது உன் வாழ்வின் சூழ்நிலைகள் மாறும். வாழ்க்கையில் அற்புதங்கள் நடக்கும். மாற்றங்கள் உண்டாகும். வேதம், அந்நாட்களை 'தேவனுடைய அநுக்கிரக காலம்' '(Time of God's favor)' (ஏசாயா 49:8) 'அநுகிரக வருடம்' '(Year of God's favor)' (ஏசாயா 61:2) என்று அழைக்கிறது. அநீதி நிறைந்த துன்மார்க்கமான இந்த உலகில் தேவ தயவு இல்லாமல் வாழ்வது கடினமானது.

## தேவ தயவு என்றால் என்ன?

- தேவனுடைய பிள்ளைகளை வெற்றியடையச் செய்ய உதவும் தேவ வல்லமையாகும் (It is the power of God behind a believer which prepares the ground for success).
- போட்டிகள் மற்றும் எதிர் சக்திகளுக்கு மேலாக தேவனுடைய பிள்ளைகளை உயர எழும்ப உதவும் தேவ கிருபையாகும் (It is the grace of God which enables a believer to rise above competitive and negative forces).
- திறமைமிக்க மற்றவர்கள் இருக்கும்போது தேவன் உங்களுக்கு விசேஷித்த கனமும் உயர்வும் தந்து நடத்துவது தேவ தயவாகும். (to be given preferential and special treatment as compared to others).

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். கீழே உள்ள உதாரணங்கள் இவைகளை நமக்கு விளக்கும்.

## தேவ தயவை பெற்றவர்கள்

வேதாகமத்தில் தேவ தயவைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டு உயர்த்தப்பட்டவர்கள் அநேகர் உண்டு. அவற்றில் சிலரை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**யோசேப்பு :** யோசேப்புக்கு தேவன் எதிர்காலத்தை சொப்பனத்தின் மூலம் வெளிப்படுத்தினார். இருப்பினும் அவனுடைய வாழ்க்கையில் உபத்திரவங்கள், எதிர்ப்புகள், ஏமாற்றங்கள், சிறைச்சாலை அனுபவங்களை அவன் சந்திக்க நேர்ந்தது. ஆனால் கர்த்தர் அவன் மேல் தயவு பாராட்டினார். கர்த்தர் யோசேப்போடே இருந்து மனிதர்களுடைய தயவையும் (ஆதி 39:3,21), பார்வோனுடைய தயவையும் கட்டளையிட்டார் (அப் 7:10). தேவ தயவு அவன் வாழ்க்கையின் சூழ்நிலைகளை மாற்றினது. தேவ தயவின் ஒரு நாள் பல வருடம்

கடினமான உழைப்பைப் பார்க்கிலும் மேலானது (A day of favor is worth more than years of labor) என்று கூறுவார்கள். யோசேப்பு தேவனுடைய தயவின் வேளைக்காக பொறுமையாக காத்திருந்தான். தேவ தயவு வரும் போது சூழ்நிலைகள் மடமடவென்று மாறும். ஆதியாகமம் 41 ம் அதிகாரம் முதல் பகுதியில் காவல்கிடங்கிலிருந்த யோசேப்பு (41:14), ஆதியாகமம் 41:41 ல் முழு தேசத்திற்கும் அதிகாரியாக மாறுகிறான். இதுதான் தேவ தயவு செய்யும் காரியம்! உங்கள்வாழ்விலும் தேவன் சில நபர்களையும் தம்முடைய வேளையில் கொண்டு வந்து தம்முடைய நோக்கத்தை அற்புதமாக உங்கள் வாழ்வில் நிறைவேற்றுவார். தேவ தயவைப் பெற தேவனோடு உள்ள உறவு மிகவும் அவசியம். இதுதான் யோசேப்பு வாழ்வில் காணப்பட்ட இரகசியம். கர்த்தர் யோசேப்போடே இருந்தார் என்று வேதம் கூறுகிறது ( ஆதி. 39:2,21,23). இன்று தேவனோடுள்ள உங்கள் உறவு எப்படி இருக்கிறது?

**எஸ்தர் :** எஸ்தர் ஒரு யூதப் பெண், தாய் தகப்பன் இல்லாத அனாதைப் பெண் (எஸ்தர் 2:7). அடிமையாக கொண்டு வரப்பட்டவள். வாழ்க்கையில் உயர்த்தப்படுவதற்கு எந்த ஒரு தகுதியிமில்லாதவள். தேவன் இவளுடைய வாழ்க்கையில் ஒரு திட்டம் வைத்திருந்தார். 127 தேசங்களை அரசாண்ட அகாஸ்வேரு ராஜாவிற்கு மனைவியாக, ராணியாக தேர்ந்தெடுப்பதற்கு அநேகம் பெண்கள் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோகப்பட்டனர் (எஸ்தர் 2:8). இதில் எஸ்தரும் இருந்தாள். மனுஷீக பார்வையில் இவளுக்கு எந்த தகுதியும் கிடையாது. மற்ற அநேகர் திறமையும் தகுதியும் உடையவர்களாயிருந்தனர். ஆனால் தேவ தயவு இவளுக்கு உண்டாயிற்று. ராஜாவின் கண்களிலும், எல்லார் கண்களிலும் தயவுக் கிடைக்க கர்த்தர் உதவினார் (எஸ்தர் 2:9,15,17). ராஜ கிரீடம் அவள் சிரசின் மேல் வைக்கப்பட்டு பட்டத்து ஸ்திரீயானாள் . ஆ....என்ன ஆச்சரியம்! இதுதான் தேவ தயவு செய்யும் காரியம்! கர்த்தர் அவளை மேன்மைப்படுத்தி தம்முடைய திட்டத்தை நிறைவேற்றினார். யூதர்களை அழிவிலிருந்து பாதுகாத்தார்.

**மேவிபோசேத் :** 2 சாமுவேல் 9ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். யோனத்தானிமித்தம் என்னால் தயவு பெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் உண்டா என்று தாவீது விசாரித்தபோது, இரண்டு கால்களும் முடமான ஒரு குமாரன் யோனத்தானுக்கு இருக்கிறான் என்று அறிவிக்கப்பட்டது. அவன் லோதேபார் என்னும் இடத்தில் இருந்தான். கவனியுங்கள்! உதவியற்ற, நம்பிக்கையற்ற இவன் வாழ்க்கையில் தேவ தயவு உண்டாயிற்று. லோதேபார் என்றால் செழிப்பற்ற, மேய்ச்சல் இல்லாத, வனாந்தரமான இடம் என்று பொருள். (place of no pasture, waste land).

நம்பிக்கையற்ற இவன் வாழ்வில் தேவன் திடீரென்று அநுக்கிரகம், தயவு செய்தார். இவன் ராஜ குமாரரில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டான் (வசனம் 11) தாவீதோடு கூட பந்தியில் நித்தம் போஷனம் பண்ணினான் (வசனம் 13). வனாந்திரமான லோதேபார் என்னும் இடத்திலிருந்து ஆசீர்வாதமான எருசலேமிற்கு வந்தான் (வசனம் 13). இதுதான் தேவ தயவு. யோனத்தான்

நிமித்தம் அவனுக்கு அது கிடைத்தது போல (2 சாமு 9:1; 1 சாமு 20:14-17), இன்று கிறிஸ்துவின் நிமித்தம் தேவன் தமக்கு தயவு செய்கிறார்.

**ரூத் :** மோவாபிய ஸ்திரியாகிய ரூத் கர்த்தரை நம்பி பெத்லகேமிற்கு தன் மாமியாருடன் புறப்பட்டு வருகிறாள். அவள் அங்கு வரும்போது வெறுமையாக நம்பிக்கையற்றவளாக வருவதை நாம் பார்க்கிறோம் (ரூத் 1:19-21). எதிர்காலமே கேள்விக்குறியாக அவளுக்கு காணப்பட்டது. ஆனால் கர்த்தர் அவளுக்கு போவாஸ் கண்களில் தயவு கிடைக்கப்பண்ணினார் (ரூத் 2: 10). அவளுடைய வெறுமையை நீக்கி நிறைவான பலனை தேவன் கட்டளையிட்டார் (ரூத் 2: 12). கணவரை இழந்து வந்த அவளுக்கு தேவன் ஒரு மறுவாழ்வை தந்தார். போவாஸ் அவளை திருமணம் செய்ய முன்வருகிறான் (ரூத் 4:13). நம்பிக்கையற்றவளாக வந்த அவளுடைய வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டதோடு இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு பட்டியலில் தன்னுடைய பெயர் இடம்பெறும் பாக்கியத்தையும் தேவ தயவு அவளுக்கு அருளியது (மத். 1:5).

**நகோமி :** நகோமி தன் கணவரையும் பிள்ளைகளையும் இழந்து தன்னுடைய வாழ்க்கையே கசந்து போன நிலையில் காணப்பட்டாள் (ரூத் 1: 20). கர்த்தர் அவளுடைய வாழ்க்கையில் பாராட்டிய தயவு அவளுடைய கசப்பை ஆசீர்வாதமாக மாற்றிற்று (ரூத் 4:14,15). ஆம், பிரியமானவர்களே, தேவன் உங்கள் கசப்பை மதுரமாக, ஆசீர்வாதமாக மாற்றுவார்.

இப்படி தாவீது (1 சாமுவேல் 16:22), தானியேல் (1:9), பவுல் போன்ற அநேக தேவ மனிதர்களின் வாழ்க்கையில் தேவன் தயவு பாராட்டி அவர்களை ஆசீர்வதித்தார்.

**தேவ தயவு கொண்டு வரும் மேலும் சில ஆசீர்வாதங்கள்:**

- இழந்த அனைத்தையும் மீட்டுக்கொள்ளுவோம் (யாத்திராகமம் 3:21)
- சத்துருக்கள் மத்தியில் கனமும் மேன்மையும் உண்டாகும் (யாத்திராகமம் 11:3)
- ஆசீர்வாத நிறைவும், திருப்தியும் உண்டாகும் (உபாகமம் 33:23)
- தகுதியில்லாதவர்களுக்கு அங்கீகாரமும் உயர்வும் உண்டாகும் (1 சாமுவேல் 16:22)
- இரட்சிக்கப்படாத அரசாங்க அதிகாரிகளின் உதவி கிடைக்கும் (எஸ்தர் 5:8; 8:5)

தேவ ஜனமே, நீங்கள் கர்த்தருக்கு பயந்து, அவரோடு நெருங்கி வாழ்வீர்களானால், தேவன் உங்களுக்கு தயவு பாராட்டுவார். தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தயவு செய்யும் காலமும் நேரமும் வந்திருக்கிறது (சங்கீதம் 102: 13). தேவ தயவு நீங்கள் எதிர்பாராத ஆசீர்வாதங்களை, நீங்கள் நினையாத இடங்களிலிருந்து, நீங்கள் நினையாத நபர்கள் மூலம் கொண்டு வரும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுங்கள்!

உலகப் பிரசித்தி பெற்ற சுவிசேஷகர் டாக்டர். பில்லி கிரகாம் ஒரு முறை ஆண்டவராகிய இயேசு உங்களது நித்திய வாழ்விற்குத் தேவை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் உங்களது உள்ளான வாழ்விற்குத் தேவை என்று அழகாகச் சொன்னார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் (எபேசியர் 5:18). அபிஷேகம் வெற்றியுள்ள வாழ்க்கைக்கு அவசியமாக இருக்கிறது. நாம் ஏன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்று சுருக்கமாக பார்ப்போம்.

**1. பாவத்தின் மேல் வெற்றி பெற (To EXERCISE Victory over sin)**

வேதம் சொல்கிறது ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் (கலா. 5 : 16). பரிசுத்தமாய் வாழ்வது நாளுக்கு நாள் கடினமாக உள்ளது. வெற்றியுள்ள, பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு தேவன் அவருடைய ஆவியை நமக்கு உதவியாகத் தந்துள்ளார். காலைதோறும் தேவனைத் தேடுங்கள். புதிய அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாள் முழுவதும் ஆவியின் நிறைவில் இருங்கள் (அப்.6 : 3, 5). நாம் ஆவியில்நிறைந்திருக்கும் போது சத்துரு உள்ளே நுழைய முடியாது. மாம்சத்தின் கிரியை அகன்று, ஆவியின் கனிகள் நம்மில் உண்டாகும் (கலா. 5 : 22, 23). இந்த பாவமான உலகில் அபிஷேகம் நம்மை முற்றிலும் வித்தியாசமானவர்களாக மாற்றும்.

**2. நம் வேலையை சிறப்பாகச் செய்ய (To EXCEL in work)**

பெசலெயேல் தேவ ஆவியில் நிறைந்தவனாய் இருந்ததால் தான் கைதேர்ந்த சித்திர வேலைக்காரனாய் இருந்தார். (யாத். 35 : 34, 35 ). பரிசுத்தத் தீர்மானத்திற்கு மாறான காரியங்கள் அந்நிய தேசத்தில் நடந்தாலும், தேவனின் வல்லமையுள்ள ஆவியானவர் தானியேல், யோசேப்பு, மேல் இருந்ததால் அவர்கள் வெற்றி பெற்றார்கள்(தானியேல் 5 : 11, 6 : 3, ஆதி. 49 : 23, 41 : 38). நீங்கள் ஆவியினால் நிரப்பப்படும் போது தான் உங்கள் வேலைகளைச் சிறப்பாக, வியக்கத்தக்க வகையில் செய்ய முடியும். ஆவியில் நிரம்பின டாக்டர் நல்ல முறையில் மருத்துவம் பார்க்க முடியும். ஆவியில் நிரம்பின என்ஜீனியர் நல்ல முறையில் கட்டிட பணி செய்ய முடியும். ஆவியில் நிரம்பின ஆசிரியர் நல்ல முறையில் கல்வி கற்றுத்தர முடியும். ஆவியில் நிரம்பின மாணவன் நன்றாக படிக்க முடியும். ஒருவன் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தால் மூத்தவர்களும், உயர் அதிகாரிகளும் அவனிடத்திற்கு ஆலோசனைக்காக, வழி நடத்துதலுக்காக வருவார்கள் (ஆதி. 41: 47-50).

**3. வேதத்தை நன்கு புரிந்து கொள்ள**
**(To ENHANCE the understanding of the Bible)**

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு எல்லாவற்றையும் போதிப்பார் என்று இயேசு சொன்னார் (யோவான் 14:20). பரிசுத்த ஆவியானவரே வேதத்தைக் கற்றுக் கொடுக்கிற சிறந்த ஆசான் (2 பேதுரு 1: 21; 1தீமோ. 3 : 16).

அவரின் துணையோடு நாம் வேதத்தைப் படிக்கும் போது நமது கண்களைத் திறந்து தேவ வார்த்தைகளைப் பற்றிக் கொள்ளச் செய்வார் (நெகே.9 : 29, 30). நம் மனதைத் தெளிவுபடுத்திக் கடினமான வேதப்பகுதிகளை நமக்கு புரியவைப்பார் (எபேசியர் 1 : 17, 18 ; யோவான் 16 : 13). வேத வசனங்களைப் புரிய வைத்து வெளிப்பாடுகளைத் தருவார்.

**4. ஜெப வாழ்வு வளம் பெற (To ENRICH the prayer life)**

பரிசுத்த ஆவியானவர் உங்களின் உதவியாளர் (யோவான் 14 : 26). அவருடைய பிரதான உதவிகளில் ஒன்று நம்முடைய ஜெப வாழ்க்கையில் உதவி செய்வது. ஏனெனில் நாம் ஜெபத்தில் பலவீனமானவர்கள், எந்த நேரத்தில் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியாது இருக்கும் போது ஜெபத்தில் உதவி செய்வது மாத்திரமல்ல நமக்காகப் பரிந்து பேசவும் செய்கிறார் (ரோமர். 8 : 26-27). பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றதும் உள்ள முதல் அடையாளம் ஆழமான ஜெபத்திற்குத் தாகம். ஆதி அப்போஸ்தலர்களும், சீஷர்களும் பெந்தெகொஸ்தே நாளை தொடர்ந்து ஜெபத்திலே புது ஆர்வத்தோடு இருந்தனர். ஜெப நேரங்களை நெஞ்சார நேசித்தனர் (அப். 2 : 42; 3 : 1).

**5. தைரியமாக சுவிசேஷம் அறிவிக்க (To EVANGELISE the lost)**

இயேசுவானவர் பரமேறுவதற்கு முன் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க ஆவியானவரின் வல்லமையை வாக்குப்பண்ணி விட்டுச் சென்றார். (அப். 1 : 18). ஆதி கிறிஸ்தவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு வேத வசனத்தைத் தைரியமாகப் பேசினர் என்று வாசிக்கிறோம். (அப். 4 : 31). ஆவியில் நிரப்பப்பட்ட விசுவாசிகள் தேவனுடைய கரத்தில் வல்லமையாய் பயன்படுத்தப்படுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் பாவிகளை தேவனிடம் திருப்பச் செய்து பாவ உணர்வடையச் செய்கின்றார். (அப். 2 : 36, 37). அவர் தைரியத்தைத் தந்துஆவிக்குரிய வரங்கள் மூலம் அவருக்குச் சாட்சிகளாய் மாற்றுகிறார். பரிசுத்த ஆவியின் வல்லமை இல்லாவிட்டால் நமது வார்த்தைகள் வெறுமையாக இருக்கும். ஜனங்களின் இருதயத்தைத் தொட முடியாது (1 தெச. 1: 5, 6). பாவக்கட்டுகளிலும், சாத்தானின் பிடியிலும், வியாதியிலும் உள்ளவர்களை விடுவிக்கப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு அதிகாரம் தருகிறார் (அப். 10 : 38). பரிசுத்த ஆவியானவர் உற்சாகமளிப்பவர், உபயோகப்படுத்துபவர், நம்மை நடத்துபவர். ஆகவே நம் வாழ்வில் அவரின்


**SPECIAL ANOINTING SERVICE**
**சிறப்பு அபிஷேக ஆராதனை**



**ஜூன் 17 2018**

**செய்தி: Rev. Dr. ஜெயபாலன்**

(உதவி தலைவர், தமிழ்நாடு ஏ.ஜி சபைகள்)

**மாலை 6.00 மணி**

# உங்கள் எதிரி சாத்தானை அறிந்து கொள்ளுங்கள்

**தோற்றம் (ஆரம்பம்)**

சாத்தான் பரிசுத்தத்திலிருந்து பாதாளத்தில் விழுந்துபோன, கலகம் புரிந்த தேவனால் நியாயந்திர்க்கப்பட்ட தேவதூதனாவான் (ஏசாயா 14: 12-15). தேவனுக்கும் தேவ பிள்ளைகளுக்கும் விரோதமாக சாத்தானும் அவனோடு சேர்ந்த தேவதூதர்களும் பொல்லாத ஆவியின் சேனையாக மாறினார்கள் (எபேசி 6:10-13, லூக்கா 11 : 18). சாத்தான் கடவுளால் படைக்கப்பட்டவனாய் இருப்பதால் அவன் தேவனுக்கு இணையாக முடியாது. அவன் பிரம்மிக்கத்தக்க ஞானமும், வலிமையும் கொண்டிருந்தாலும் அவன் எப்போதும் தேவ சித்தத்துக்குக் கட்டுப்பட்டவன்.

**சாத்தானின் இயல்பு**

அவன் பொய்யனும், கொலை பாதகனுமாய் இருக்கிறான் (யோவான் 8:44); எதிராளியானவன் (1 பேதுரு 5:8,9); இப்பிரபஞ்சத்தின் தேவன் (2 கொரி 4:4); இவ்வுலகத்தின் அதிபதி (யோவான் 12:31,14:30,16:11, 1 யோவான் 5:19); வஞ்சிப்பவன் (2 கொரி 11:3); நாசக்காரன் (destroyer) (வெளி 9:11); ஒளியின் வேஷம் தரிப்பவன் (மத் 13:24-30,36-43, 2 கொரி 11:13-15). சாத்தான் என்பது எதிராளி என பொருள்படும். பிசாசு என்றால் குற்றம் சாட்டுபவன் என்றும் பொருள் (சகரியா 3: 1-5).

**சாத்தானின் வேலைகள்**

சாத்தான் உங்கள் மனதை வஞ்சிக்கத் தேடுவான் (ஆதி 3:1, மத் 16:21-23, 2 கொரி 11:3); வசனத்தை பறித்துக் கொள்பவன் (மத்.13:19); சரீரத்திற்கு தீங்கு விளைவிப்பவன் (யோபு 2:4-7, 2 கொரி. 12:7); தன் இச்சையின்படி செய்ய மனிதர்களைத் தூண்டுபவன் (1 நாளா. 21:1, 2 திமோ. 2:26); உங்கள் உடமைகளை நாசம் செய்பவன் (யோபு 1:13); ஊழியம் செய்ய தடை செய்பவன் (1 தெச 2:18); உங்களைக் கர்வம் கொள்ளச் செய்பவன் (1 திமோ 3: 6,7); உபத்திரவத்திற்குக் காரணமானவன் (வெளி 2:10); பாவம் செய்யும்படி சோதிப்பவன் (மத். 4:1); பாவம் செய்த பிறகு உங்களைக் குற்றம் சாட்டி மனம் தளரச் செய்பவன் (2 கொரி 2:6-11). அச்சமயம் நீங்கள் விசுவாசத்தினால் தேவனின் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (1 யோவான் 1:9).

**சாத்தானின் தோல்வி**

கிறிஸ்து தன்னுடைய வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறி செல்லுதல் (ascension) மூலம் சாத்தானையும் அவன் சேனையையும் தோற்கடித்தார் (யோவான் 12 :31-33; எபேசி 1:15, 2:10; கொலோ 2: 13-15). தேவ ஜனம் சாத்தானின் தந்திரங்களை அறிந்திருப்பது அவசியம் (2 கொரி 2: 11). சாத்தான் வல்லமையும், தந்திரமும் உடையவனாய் இருப்பதால் தேவ வசனத்தாலும், ஜெபத்தாலும் அவனை எதிர்த்து நிற்க வேண்டும் (மத். 4: 1-11, யாக்கோபு 4:7, எபே. 6:17-18). விசுவாசி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொண்டு (எபே. 6:10-18) ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் ஆவிக்குரிய சக்தியுள்ளதாயும், சாத்தானை ஜெயங்கொள்ளக் கூடிய வல்லமை உடையதாயும் இருக்கிறது (வெளி 12:11, 1 யோவான் 4:4).

பிசாசுக்கு இடங்கொடாமலும் இருக்க வேண்டும் (எபே. 4: 27; 4: 17-32). சாத்தானுக்கு இடங்கொடுக்கக் கூடிய சில பாவங்களைப் பற்றி வேதம் குறிப்பிடுகிறது. இச்சை, பொய்யுரைத்தல், கோபம், திருட்டு, புத்தியீனமான பேச்சு, பரியாசம், கெட்ட வார்த்தை, கசப்பு, மூர்க்கம், கூக்குரல், தூஷணம் போன்றவை உங்கள் புதிய வாழ்க்கையைக் குலைத்துப் போட சாத்தான் உங்கள் பழைய வாழ்க்கையில் காணப்பட்ட எந்த ஒரு பாவத்தையும் பயன்படுத்த முடியும். ஆகவே உங்கள் இதயத்தைத் தேவனுக்கு முன்பாக தூய்மையாக வைத்துக் கொள்ள உறுதியாய் இருங்கள்.

**சாத்தானின் எதிர்காலம்**

சாத்தான் இன்னமும் கர்த்தரின் சந்நிதியில் வரக் கூடியவனாய் இருக்கிறான் (யோபு 2:1, சகரியா 3). ஆனால் ஒரு நாள் அவன் விழத்தள்ளப்படுவான் (வெளி 12:7-12). கர்த்தர் தன் இராஜ்ஜியத்தை நிறுவ வரும்போது சாத்தானை நித்தியத்திற்கும் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளி விடுவார் (வெளி 20:10). நரகம் சாத்தானுக்கும் அவன் தூதர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் சாத்தானின் பொய்யை நம்புபவர்கள் சாத்தானோடு நரகத்தில் வாதிக்கப்படுவார்கள் (வெளி 20:11-15).

மொழியாக்கம் சகோ. **இம்மானுவேல்**




**தாய்மார்கள் தினம்**

## 2018 May 13, Sunday

**2018 மே 13, ஞாயிறு**

தாய்மார்களுக்காக சிறப்பு ஜெபங்கள்,
செய்தி, பரிசுகள் உண்டு.
பங்குபெறுங்கள்! ஆசீர்வாதம் பெறுங்கள்!

There will be special prayers, message and gifts
for the mothers on the Mother's Day Sunday Service
Come and Be Blessed!

## 2018 June 17, Sunday

**2018 ஜூன் 17, ஞாயிறு**

தகப்பன்மார்களுக்காக சிறப்பு ஜெபங்கள்,
செய்தி, பரிசுகள் உண்டு.
பங்குபெறுங்கள்! ஆசீர்வாதம் பெறுங்கள்!

There will be special prayers, message and gifts
for the fathers on the Father's Day Sunday Service.
Come and Be Blessed!




**தகப்பன்மார்கள் தினம்**

*சிறப்பு செய்தி :*

Rev. Dr. **ஜெயபாலன்**

*உதவித்தலைவர், தமிழ்நாடு ஏ.ஜி.சபைகள்*

# யோவான் சுவிசேஷத்தில் இயேசுவின் அற்புதங்கள்

யோவான் சுவிசேஷத்தில் ஒன்பது அற்புதங்கள் உள்ளன. அவற்றில் ஏழு அற்புதங்களைச் சற்று சிந்திப்போம். (இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் 153 பெரிய மீன்கள் பிடித்தல் மற்ற 2 அற்புதங்கள்). இயேசுவின் அற்புதங்கள் அவருக்கு இருந்த வல்லமையைக் காட்டுகின்றன.

**1. தரத்தின் மேல் வல்லமை** – Power Over Quality

இயேசுவின் முதலாம் அற்புதம் யோவான் 2:1-11 வசனங்களில் கூறப்பட்டுள்ளன. இயேசு இங்கு நிறமற்ற, சுவையற்ற, மணமற்ற, தண்ணீரை நிறமுள்ள, சுவையுள்ள, மணமுள்ள திராட்சரசமாக மாற்றுகிறார்.

**2. தூரத்தின் மேல் வல்லமை** – Power over Distance

யோவான் 4:46-54 வசனங்களில் இயேசு ராஜாவின் மகனை சுமார் 20 மைல் தூரத்திலிருந்து சுகமாக்குகிறார். இயேசு கானாவில் இருக்கிறார். ராஜாவின் மகன் கப்பர் நகூமில் இருக்கிறான். அவர் தூரத்தின் மேல் வல்லமையுள்ளவர் (எரே.23:23).

**3.நேரத்தின் மேல் வல்லமை** – Power Over Time

யோவான் 5: 1-9 வசனங்களில் 38 வருடம் வியாதியாயிருந்த மனிதனை இயேசு சுகமாக்கினார். இது அவருக்கு நேரத்தின் மேல் இருந்த வல்லமையைக் காட்டுகிறது.

**4. எண்ணிக்கையின் மேல் வல்லமை** – Power Over Quantity

யோவான் 6: 1-4 வசனங்களில் இயேசு 5 அப்பம் 2 மீன்களைக் கொண்டு 5000 பேரைப் போஷித்தார். சாப்பிட்டுத் திருப்தியடைந்த பின்பு மீதி 12 கூடைகள் நிறைய எடுத்தார்கள். சிறிய அளவு உணவை எடுத்து பெரிய கூட்டத்திற்கு அதை பெருகச் செய்தார். அவருடைய வல்லமை அளவு அல்லது எண்ணிக்கையின் மீதும் உள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

**5. இயற்கையின் மேல் வல்லமை** – Power over Nature

இயேசு தண்ணீரின் மேல் நடந்தார் என்று யோவான் 6: 16-21 வசனங்களில் வாசிக்கிறோம். இது அவருக்கு இயற்கை மீது வல்லமை உண்டு என்பதை காட்டுகிறது. மற்றொரு நேரம் சீறிய காற்றையும், கடலையும் அவர் அதட்ட, அவைகள் அமைதலாயிற்று என வாசிக்கிறோம் (மாற்கு 4:35-41).

**6. வியாதியின் மேல் வல்லமை** – Power over Disease


யோவான் 9:1-9 வசனங்களில் இயேசு பிறவிக் குருடனை சுகமாக்கி வியாதியின் மீது தனக்கிருந்த வல்லமையை வெளிப்படுத்துகிறார். இயேசு தன்னிடத்தில் வந்த அனைத்துவித வியாதியஸ்தர்களையும் சுகமாக்கினார் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 4: 23.)

**7.மரணத்தின் மேல் வல்லமை** – Power Over Death

கடைசியாக இயேசு தன்னுடைய நண்பனாகிய லாசருவை, மரித்த நான்கு நாட்களுக்குப் பிறகு உயிரோடு எழுப்புவதை யோவான் 11:1-46 வசனங்களில் வாசிக்கிறோம். லாசருவே, வெளியே வா என்று சொன்னவுடன் அவன் கல்லறையிலிருந்து வெளியே வந்தான். இது இயேசுவுக்கு மரணத்தின் மீதுள்ள வல்லமையைக் காட்டுகிறது.

ஆம் இன்றும் இயேசுவின் வல்லமை மாறவில்லை. அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் (எபி. 13:8). அவரை விசுவாசிக்கும் போது நாமும் அவருடைய வல்லமையை அனுபவிக்க முடியும். அற்புதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்!.

## ஆண்கள் ஐக்கியம் - Men's Fellowship



**3வது**
**திங்கட்கிழமை**
**மாலை 7.00 மணி**

திருச்சபையிலுள்ள
அனைத்து ஆண்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

## வாலிபர் ஐக்கியம் - Youth Fellowship

I & III **ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 4.30 மணி முதல்**
**6.00 மணி வரை**

திருச்சபையிலுள்ள
அனைத்து வாலிபர்களும்
பங்குபெறும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை*
*கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

## Your Offerings and Donations Can Be Sent to

**A/c Name : City Revival AG Church**
**A/c Number : 35354599169**
**Bank Name : STATE BANK OF INDIA**
**IFSC Code : SBIN0000930**
**Branch Code : 00930**
**Address : Tiruchirappalli Main Branch, 7, MacDonalds Road, Cantonment, Trichy - 1**

**A/c Name : City Revival AG Church**
**A/c Number : 1196172000007824**
**Bank Name : KARUR VYSYA BANK**
**IFSC Code : KVBL0001196**
**Branch Code : 001196**
**Address : 5, Bharathiar Salai, Jenne Plaza, Cantonment, Trichy -1**

Kindly intimate us through email or sms immediately after you have sent your offering through bank transfer so that we can confirm the receipt of your offering.



## VBS 2018

**ஏப்ரல் 30 திங்கள் முதல்**
**மே 5 சனி வரை**



# GOD WILL SHOW YOU FAVOUR

*Rev. Dr. Jerry Daniel*

***Praise be to the Lord who has extended his good favor to me. Ezra 7:28***

Every child of God needs the favor of God upon his/her life. The favor of God takes a believer to places where money and qualifications cannot take. The favor of God will bring opportunities into your life which skill and hard work cannot bring. There are times in the calendar of God when He steps in to favor His children. Your days will never be the same. Things will change. Miracles will happen. That time is called “Time of God's favor(Psalm 102:13; Isaiah 49:8) and “the year of the Lord's favor” (Isaiah 61:2). Without the favor of God we will find it difficult to make it in our society where wickedness and corruption abound. Dear Child of God, one touch of God's favor will turn everything around in your life.

**WHAT IS THE FAVOUR OF GOD?**

Someone described the favor of God in the following way:

(1) It is the power of God behind a believer which prepares the ground for success

(2) It is the grace of God which enables a believer to rise above competitive and negative forces

(3) It is to be given preferential and special treatment as compared to others.

Many people in the Bible operated in the favor of God.

**PEOPLE OF GOD'S FAVOUR**

There are many people in the Bible who received the favor of God in their lives. Let me show you some of them.

**JOSEPH -** Prison to Palace

God revealed Joseph his future through dreams. But he experienced trials, hardships, oppositions, prison life etc. But God showed favor in his life. He found favor in the eyes of Potiphar in a foreign land (Gen. 39:4). When he was thrown into prison as a result of false accusation, the Lord showed him kindness and granted him favor in the eyes of the prison warden (Gen. 39:21). Acts 7:10 says, “God delivered him out of all his afflictions, and gave him favor and wisdom in the sight of Pharaoh king of Egypt; and he made him governor over Egypt and all his house.” The favor of God turned everything around in his life. People say, “A day of favor is

worth more than years of labor." Joseph waited for God's time of favor and for the things to change. When God started to show him favor, things changed dramatically. Joseph who was in prison in Genesis 41:14 was elevated and promoted to be the prime Minister of Egypt in Genesis 41:41. Yes, within few hours, divine favor can take you anywhere God wants you to be. The secret behind Joseph receiving God's favor was his relationship with God. Favors are based upon relationships. How is your relationship with God today? The Bible says that the Lord was with Joseph (39:2, 21, 23).

**2. ESTHER** – Orphan to Queen

Esther was Jewess and she was an orphan (Esther 2: 7). She was a slave taken captive. She had no merit to be elevated in life. But God had a plan in her life. One day many beautiful young women were called to the citadel of Susa in order to be chosen as the wife for King Ahasuerus. Esther was also among them (Esther 2:8). Humanly speaking, she did not have any qualification to be made the queen. , But she enjoyed the favour of God. The Bible says that she found favour in the eyes of the king and everyone who saw her (Esther 2:9, 15, 17). The king was attracted to Esther and he set a royal crown on her head. Wow! This is what the favor of God does in our lives. God honored her and fulfilled his plans in her life. She was instrumental in saving the Jews from the destruction. The book of Esther further tells us that God's favor will produce prominence and preferential treatment and kindness (Esther 5:8). God's favor will get petitions granted, even by ungodly civil authority (Esther 5:8). God's favor will change rules, regulations, even laws if necessary to your advantage (Esther 8:5).

**3. MEPHIBOSHETH** – Poverty to Plenty

2 Samuel chapter 9 is a wonderful chapter where we find God's favor working in the life of Mephibosheth. David asked, "Is there anyone still left in the house of Saul to whom I can show favor for Jonathan's sake? He was told that there was still a son of Jonathan who was lame in both feet. He was living in a place called Lo Debar. He was in hapless, helpless and hopeless situation. 'Lo Debar' means "place of no pasture, waste land.' God showed favor to this man who had no hope in his life. He was suddenly and unexpectedly brought to king's place and treated as one of king's own sons (2 Samuel 9:11). He was eating at the king's table daily (v.13). From the wasteland, he was brought to the blessed land of Jerusalem. God's favor gave him new position, new place and new provisions. These are given to him by David for the sake of his covenant with Jonathan (2 Sam. 9:1; 1 Sam.

20:14-17). Today God shows his favor in our life for the sake of his son Jesus Christ who made a covenant with us with his precious blood.

Ruth (Ruth 2:10), Naomi (Ruth 4:14), David (1 Sam 16:22), Daniel (Dan.1:9) and many others received the favour of God. That changed their lives miraculously.

The Bible says that we will receive many more blessings in our lives when God shows his favor. The following are a few examples.

- ✯ We will receive whatever we have lost (Exodus 3:21).
- ✯ We will receive honor and regard among the enemies (Exodus 11:3)
- ✯ We will receive the fullness of God's blessings and be satisfied (Deut. 33:23).
- ✯ We will get our petitions granted, even by ungodly authorities (Esther 5:8; 8:5).

Dear Children of God, if you fear God and walk intimately with Him, God will show his favor in your life also. The time to receive God's favor is at hand. God's favor will bring unexpected blessings from unusual places and people. May the Lord bless you!

---




# BIBLE STUDY

## வேதப்பாடம்

ஒவ்வொரு ஞாயிறு
மாலை 6.30 மணிக்கு

**Every Sunday @ 6.30 p.m**

தலைப்பு : **இயேசு கிறிஸ்துவின் போதனைகள்**
Topic : **The Teachings of Jesus Christ**

"நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி
அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத்தேயு 28 : 20)

# இசைப் பயிற்சி வகுப்புகள்

இடம் : **சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்**
ஜென்னி பிளாசா, திருச்சி - 1.

Guitar, Keyboard,
Rhythm Pad
& Drums

**செவ்வாய் தோறும் மாலை 6.00 மணி முதல் 8.15 மணி வரை**

# BE FILLED WITH THE HOLY SPIRIT

The world-renowned evangelist Dr. Billy Graham once beautifully said, 'you need the Lord Jesus for your eternal life and the Holy Spirit for your internal life.' Every believer in Jesus Christ needs to be filled with the Holy Spirit (Eph. 5:18). It is an imperative for living a victorious Christian life. Let us briefly see here why we need to be filled with the Holy Spirit.

**1. To EXERCISE** victory over sin

The Bible says, `live by the Spirit, and you will not gratify the desires of the sinful nature (Gal. 5:16). Days are becoming more and more difficult to live holy. But God has made full provision for a victorious life in giving us His Spirit. Seek God for fresh filling of His Spirit each morning and stay full of Him through the day (Acts 6:3, 5). When we are full, there is no room for the devil to enter. Then we will be able to eschew the works of the flesh and exhibit the fruit of the Spirit (Gal. 5:22,23). The anointing will make us daringly different in the dirty world.

**2. To EXCEL** in work

Bezalel was filled with the Spirit of God and so he became an extraordinarily skilled craftsman (Exo. 35:30, 35). Daniel and Joseph prospered in the strange lands which were hostile to their holy convictions because the excellent Spirit of God was upon them (Dan. 5:11; 6:3; Gen. 49:23-25; 41:38). Yes, when you are filled with the Spirit, you will be able to do your work exceptionally and extraordinarily well. A spirit-filled doctor will treat better, a Spirit-filled engineer will build better, a Spirit-filled teacher will teach better and a Spirit-filled student will study better! When a person is filled with the Spirit of God, even his seniors and superiors will come to him for counsel and guidance (Gen. 41:37-40).

**3. To ENHANCE** the understanding of the Bible

Jesus said, `the Holy Spirit will teach you all things' (John 14: 26). The Holy Spirit is the best teacher of the Bible because he is the author (2 Peter 1:21; 2 Tim. 3:16). This does not mean we don't need people and study materials. The Holy Spirit will turn all information into inspiration. When we study the Bible with the help of the Spirit, He will open your eyes to get a grasp of His Word (Neh. 9:20,30). He will illuminate our minds to understand the difficult passages of the Scriptures (Eph. 1:17, 18; John 16:13). He will quicken our understanding and give revelations from the Word of God.

**4. To ENRICH** the prayer life

The Holy Spirit is called a Helper (John 14:26). One of His primary helps is in the area of prayer, because we are all weak in it. We do not know at times what to and how to pray for. In those times, the Holy Spirit not only helps is in our prayer but also intercedes for us and through us (Rom. 8:26, 27). One of the first signs of those baptized with the Spirit is the desire and depth in prayer. The early disciples following the Pentecost received a renewed interest in prayer and cherished the sweet hour of prayer (Acts 2:42; 3:1).

**5. To EVANGELISE** the lost

The last recorded words of Jesus before His ascension was the promise of the Spirit's power for global evangelization (Acts 1:8). About the early Christians we read, `they were all filled with the Holy Spirit and spoke the Word of God boldly' (Acts 4:31). The Spirit-filled believers are powerful means in the hands of God to convince and convict the sinners (Acts 2:36, 37). The Holy Spirit gives us the *courage, charisma and charismata* (spiritual gifts- 1 Cor. 12: 7-11) to witness for Him. Without the power of the Holy Spirit, our words will be hollow and have no power to touch the people's heart (I Thess. 1:5, 6). The Holy Spirit empowers us to emancipate those who are under the bondage of sin, sickness and Satan (Acts 10:38). The Holy Spirit is the divine Energizer, Equipper and Enabler so that we can accomplish God's purpose in our lives.


**30 DAYS OF PRAYER FOR THE MUSLIM WORLD**

**மே 15 – ஜூன் 14 2018**

**நமது பட்டணத்திலும், தேசத்திலுமுள்ள இஸ்லாமிய நண்பர்களின் இரட்சிப்பு, விடுதலை மற்றும் ஆசிர்வாதத்திற்காக 30 நாட்கள் பாரத்தோடு ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

**பெந்தெகொஸ்தே ஞாயிறு**

**PENTECOST SUNDAY**

**May 20, 2018**

Pentecost SUNDAY

# Miracles of Christ Recorded in John's Gospel

There are about nine outstanding miracles recorded in the book of John. We are going to study but seven of them, omitting Jesus' resurrection from the dead, and the drought of fishes recorded in chapter 21. Each miracle that Jesus performed indicated His divine power over a certain sphere.

**1.Power Over Quality**

The first miracle performed by Jesus is recorded in John 2:1-11. This is a miracle of water turning into wine. The fact that Jesus could instantly bring about the wine which took a vine months to produce was indication of His supernatural power. It showed that Jesus had power over quality.

**2.Power over Distance**

In John 4:46-54, we find a record of Jesus ' healing the nobleman's son. In this instance Jesus healed a boy who was about twenty miles away from Him. Jesus was in Cana, and the boy in Capernaum. So Jesus showed Himself to be the master of distance by this miracle (Jer. 23:23).

**3.Power Over Time**

In John 5:1-9, Jesus healed a man lame for thirty-eight years. It is common knowledge that the longer one is afflicted by any disease, the more difficult it is to cure. This man had been in his infirmity, the Bible says, for thirty-eight years. But Jesus instantly healed him of his disease demonstrating His Power over both disease and time.

**4.Power Over Quantity**

In John 6:1-4, we have the account of Jesus' feeding the five thousand. Here Jesus took the five loaves and two fish, fed the multitude as much as they would eat , and yet there were twelve baskets of broken pieces left over. This shows Jesus ' power over quantity. He took this small amount of food and miraculously multiplied it so as to feed the vast multitude.

**5. Power over Nature**

John tells of another miracle performed by Christ. In 6:16-21, we have the account of Jesus' walking on water. This miracle indicated Jesus' power over nature, as do the instances in the other Gospels, when by a word by Him, the sea is calmed (Mark 4:35-41).

**6. Power over Disease**

In John 9:1-9, we have the account of Jesus' healing a man, blind from his mother's womb. "Neither this man nor his parents sinned, "said Jesus, "but this happened so that the Glory of God might be displayed in his life." The man complied with Jesus ' command, and came forth seeing. This miracle indicated Jesus' power over misfortune.

**7. Power Over Death**

The final miracle mentioned by John is the resurrection of Lazarus from the dead. This miracle is recorded in John 11:1-46. The account says that Lazarus had been dead for four days. But Jesus prayed to God the Father and shouted with a loud voice, "Lazarus, come forth. "and Lazarus came forth. By raising this man from the dead, Jesus showed His power over death.

Dear friend, Jesus is the same yesterday, today and forever (Heb.13:18). He can do the same miracles in your life also if you believe in him.

# KNOW YOUR ENEMY - SATAN

**1. His Origin**

Satan is a rebellious angel who was judged by God and fell from holiness to wickedness (Isa. 14:12–15). The angels who fell with him make up his army of spirits opposed to God and God's people (Eph. 6:10–13; Luke 11:18). Because Satan is a created being, he is not equal to God; though he possesses tremendous wisdom and power, Satan is always subject to God's will.

**2. His Nature**

He is a liar and murderer (John 8:44); an adversary (1 Pet. 5:8–9); the god of this age (2 Cor. 4:4); the ruler of this world (John 12:31; 14:30; 16:11; 1 John 5:19); a deceiver (2 Cor. 11:3); a destroyer (Rev. 9:11; Abaddon means "destruction"); and a counterfeiter of God (Matt. 13:24–30, 36–43; 2 Cor. 11:13–15). The word Satan means "adversary," and devil means "slanderer, accuser" (Zech. 3:1–5).

**3. His Works**

Satan can seek to deceive your mind (Gen. 3:1ff.; Matt. 16:21–23; 2 Cor. 11:3); snatch away God's Word (Matt. 13:19); attack your body (Job 2:4–7; 2 Cor. 12:7); control your will (1 Chron. 21:1ff.; 2 Tim. 2:26); destroy your possessions (Job 1:13ff.); hinder your work for the Lord (1 Thess. 2:18); make you proud (1 Tim. 3:6–7); cause persecution (Rev. 2:10); and tempt you to sin (Matt. 4:1ff.). When you have sinned, he can accuse you and discourage you (2 Cor. 2:6–11). You must claim God's forgiveness by faith (1 John 1:9).

**4. His Defeat**

In His life, death, resurrection, and ascension, Christ defeated Satan and his evil hosts (John 12:31–33; Eph. 1:15–2:10; Col. 2:13–15). God's people must recognize the devil and know when he is at work (2 Cor. 2:11) as he is powerful and subtle (1 Pet. 5:8); and resist him with the Word of God and prayer (Matt. 4:1–11; James 4:7; Eph. 6:17–18). The believer must wear the whole armour of God (Eph. 6:10ff.) and use the spiritual equipment. There is overcoming power in the blood of Christ (Rev. 12:11) and the power of the Spirit (1 John 4:4).

**5. His Future**

Satan still has access to heaven (Job 1–2; Zech. 3) but one day will be thrown out (Rev. 12:7–12). When the Lord Jesus comes to establish His kingdom, He will cast Satan into hell, the lake of fire, where he will be tormented forever (Rev. 19:11–20:3). Hell was prepared for Satan and his angels, but people who reject Christ and believe Satan's lies will suffer in hell with

# ABC'S OF RAISING GODLY CHILDREN

**A** is for Accountability. Hold your children accountable for their behavior. Matt. 12:36.

**B** is for Boundaries. Set specific limits, and make clear the repercussions if those limits are exceeded.

**C** is for Consistency. Hold to the same principles and practices. Rom. 2:21-22.

**D** is for Discipline. Make the punishment fit the crime. Never discipline in anger. Pro. 13:24

**E** is for Example. Children are in greater need of models than critics. Set a good example. John 13:15

**F** is for Forgiveness. Practice it and teach the importance of forgiving. Mat 6:14

**G** is for Giving. Teach the joy of giving, not only to family and friends, but to strangers in need. Luke 6:38

**H** is for Humor. Keep your sense of humor. Promote laughter with your children. Prov. 15:13

**I** is for Imagination. Be creative, and play with your children. Read and sing with them. Eph. 5:19

**J** is for Justice. Be fair, and insist that they be fair, also. Col 3:24-25

**K** is for Knowing. You must know your children's friends and their parents as well as their teachers.

**L** is for Listening. Listen to your children. It will teach them how to listen to others, and their thoughts will give you insights. James 1:19

**M** is for Morals. Be sure your own standard of conduct is sound. 1 Pet 1:15

**N** is for No. Use it, and mean it. Exodus 20. "Thou shalt not...."

**O** is for Over-reacting. Give the kid a break. Be firm, but don't act as if the world is coming to an end. Remember that they are, but flesh. Ps. 78:39.

**P** is for Pressure. Reduce the pressure on your children, but insist they maintain high standards. Phil 3:14

**Q** is for Questions. Pay close attention to their questions and give simple answers unless they demand more. 1 Pet 3:15

**R** is for Respect. Show respect, teach respect and earn respect. Eph. 6:2,4

**S** is for Source of Strength. Share your own faith or beliefs with your children. Faith can be their port in the storms of life later. Deut. 6:6-8

**T** is for Togetherness. Have special, designated times to be together as a family--but know when to let go, too.

**U** is for Uniqueness. Understand the uniqueness of each child, and let that child be who he or she is.

**V** is for Voice. Tone of voice can convey more to a child than the words spoken. Pro. 15:1

**W** is for Words. Keep your word. Promises broken destroy trust. Eccl 5:5

**X** is for examine. Examine constantly and be aware.

**Y** is for You. Take care of yourself mentally, physically and spiritually. A happy parent helps a child to be happy.

**Z** is for Zeal! Be zealous for God so that you children will follow the Lord faithfully

| GOALS FOR 2018 | | 2018 சபை இலக்குகள் | |
|---|---|---|---|
| 100 | New Families | 100 | புதிய குடும்பங்கள் |
| 100 | Baptism | 100 | ஞானஸ்நானம் |
| 100 | Holy Spirit Baptism | 100 | பரிசுத்த ஆவி அபிஷேகம் |
| 1 | New Village Church | 1 | புதிய கிராம சபை |
| 20 | New Leaders | 20 | புதிய தலைவர்கள் |
| 15 | New Prayer Cells | 15 | புதிய ஜெபக்குழுக்கள் |

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st Sunday-11.00 am (Eng)<br>1st & 3rd Sunday-4.30 pm (Tamil) | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Prayer Cells | Wed/Thu - புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | Ist Friday - வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | IVth Friday - வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Magazine Subscription**
Bi -Monthly : Rs.20/-
Yearly : Rs.100/-
Postage : Rs.25/- Extra

**Send Your prayer requests**
**@**
**www.cityrevivalagchurch.org**

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

# PRAISE & WORSHIP SERVICES

## EVERY SUNDAY

Tamil Service - 7.00 a.m,
11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

## ஞாயிறு தோறும்

தமிழ் ஆராதனை 7.00 மணி,
11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

***Come with your friends & family & Receive the blessings of God***



Sunday School is conducted for kids below 14 years





## Rev. Dr. JERRY DANIEL

Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org